

செங்கல்பட்டு மாவட்டத்தில் வருகிற 11ஆம் தேதி கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு அரசின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் விழாவில் பங்கேற்க வருகைத் தர உள்ளதை முன்னிட்டு நிகழ்ச்சி நடைபெறும் செங்கல்பட்டு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக மைதானத்தில் நடைபெற்று வரும் பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

### திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே சாலை விபத்து!

# காயமடைந்தவர்களுக்கு திருவள்ளூர்- திருத்தணி மருத்துவமனையில் சிகிச்சை!

## பாதிக்கப்பட்டவர்களை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் சென்று நலம் விசாரித்தார்!

திருவள்ளூர், மார்ச்.8-

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி மற்றும் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில். நேற்று (07.03.2025) பிற்பகல் 03.30 மணியளவில் திருத்தணியில் இருந்து சோளிங்கர் நோக்கிச் சென்ற டிப்பர் லாரியும், ஆர்.கே.பேட்டையில் இருந்து திருத்தணி நோக்கிச் சென்ற அரசுப் பேருந்தும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதிய சாலை விபத்தில் காயமடைந்து திருத்தணி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வரும் 25 நபர்களை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். உரிய சிகிச்சை அளிக்கவும் மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

செய்தியாளர்களுக்கு மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் தெரிவிக்கையில்,

திருத்தணியில் இருந்து சோளிங்கர் நோக்கிச் சென்ற டிப்பர் லாரியும், ஆர்.கே.பேட்டையில் இருந்து திருத்தணி நோக்கிச் சென்ற அரசுப் பேருந்தும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதிய சாலை விபத்தில் பேருந்தில் பயணம் செய்த திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை வட்டம், அம்மையார்குப்பத்தைச் சேர்ந்த திரு.பாண்டுரங்கன் (வயது 60) த/பெ. சுப்பிரமணி, திரு.சிவானந்தம் (வயது 53) த/பெ.சண்முகம், திரு. மகேஷ் (வயது 40) த/பெ.கண்ணியப்பன் மற்றும் திரு.முரளி (வயது 38) த/பெ.பெரியசாமி ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், இவ்விபத்தில் காயமடைந்து திருத்தணி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 25 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர், 5 நபர்கள் தனியார் மருத்துவமனைக்கும், திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்7 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் .தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திருத்தணி எம்.பூபதி, கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு உள்பட அரசு அதிகாரிகள் திருவள்ளூர் மற்றும் மருத்துவர்கள் செவிலியர்கள் உட்பட பலர் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.தலைமை! இளைஞர் அணி அ.யுவராஜ் ஏற்பாட்டில்

# காஞ்சிபுரத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

## முனைவர் சபாபதி மோகன்-ம.மோகநிதி சிறப்புரை!

காஞ்சிபுரம், மார்ச், 8

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் இந்தித் திணிப்பு, நிதிப்பகிர்வில் பாரபட்சம், தொகுதிமறு சீரமைப்பில் அநீதியை இழக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டனப் பொதுக் கூட்டம் நாளை 9.3.2025ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை 6 மணிக்கு காமராஜர் சாலை, பேருந்து நிலையம் எதிரில்காஞ்சிபுரத்தில் நடைபெறுகிறது.

இக் கண்டனக் கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், கே.திலகர், எஸ்.சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், பி.எம்.குமார், பி.எம். பாபு, பெ.மணி , க.பால்ராஜ், டி.சஞ்சய்காந்தி, ஆ. ஆண்டோசிரில்ராஜ், ஆர். எஸ்.யுவராஜ், ஆர்.எ. மணிகண்டன், டி. சிலம்புசெல்வன், ஆர்.கார்த்திக், எ.குணசேகரன், எம். கே.நந்தா என்கிற விநாயகமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் தி.சபாபதி மோகன், கழக இளம் பேச்சாளர் ம.மோகநிதி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலு சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி. வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், சன்பி ராண்ட் கே.ஆறுமுகம், பிரபு கஜேந்திரன், ப.அப்துல்மாலிக், ச. இனியரசு, வி.கோகுலகண்ணன், கு.மலர்விழி, டி.ஆர்.நாராயணன், டாக்டர் ஆர்.டி.அரசு, எம்.எஸ்.சுகுமார், கே.குமார், கெ.ஞானசேகரன், பி.சேகர், டி.குமார், க.குமணன், பி.எச்.சத்தியசாய், பொன்.சிவக்குமார், கே.கண்ணன், ஜி.தம்பு, வி.ஏழுமலை, எ.சிற்றரசு, கே.எஸ்.ராமச்சந்திரன், எம்.எஸ்.பாபு, இ.சரவணன், என்.பாண்டியன், என்.எஸ். பாரிவள்ளல், ஏ.சுந்தரமூர்த்தி, வி.டி.ஆர்.வி.எழிலரசன், டி.மோகன்தாஸ், ஜி.சுகுமாறன், தி. அன்பழகன், ப.சுந்தரவரதன், வி.எஸ். ராமகிருஷ்ணன், எஸ். கே.பி.சீனிவாசன், எஸ்.சிகாமணி, வெளிக்காடு எழிலரசி சுந்தரமூர்த்தி, கே.ஏ. செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துசெல்வம், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்பராயன், நித்யாசுகுமார், மலர் கொடி குமார், ஆர்.கே. தேவேந்திரன், ஹேமலதாஞானசேகரன், சாந்திராமச்சந்திரன், இல்லாமல்லிஸ்ரீதரன், நந்தினிகரி காலன், கோ.தசரதன், சம்யுக்தா அய்யனார், செவிலிமேடு எஸ்.மோகன், எஸ். கே.பி. எஸ்.சாந்தி சீனிவாசன், ஜி.சசிகலா, நாத்திகம் நாகராசன், ஆ.செல்வி, வ. மலர்மன்னன், சி.ராதாகிருஷ்ணன், ஆ.சசிகுமார், டி.வெங்கட்ராமன், டி.ஜெய்கணேஷ், இ.அசோகன், மு.குணசேகரன், எம். எஸ்.ஜியாவுதின், டாக்டர் வி.திவாகர், ஓ.எஸ்.தினகரன், பி.எஸ்.ரமேஷ், ஏ. நூருல் அமின், ஆர்.ரங்கநாதன், வி.புருஷோத்தமன், கே.நாகராஜ், எ.என்.பாரத், எஸ்.கண்ணதாசன், எஸ். மாலதி, எஸ்.சுகுமாரன், த.விஸ்வநாதன், எஸ்.மாமல்லன், ப.சுரேஷ், பி.சங்கர், ஜெ.வரதராஜன், எஸ். சேகர், அ.பாலமுருகன், எஸ்.எஸ்.ஆர்.சசிக்குமார், பி.என்.ரவி, நா.கருணாகரன், கே.ஆறுமுகம், கே.பார்த்திபன், எம்.திருஞானசம்பந்தம் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ்உதயன் ஏற்பாட்டில்

# இனமான பேராசிரியரின் 5-ம் ஆண்டு நினைவேந்தல்!

## கழகத்தினர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்தனர்!

திருவள்ளூர்,மார்ச்.8-

அமைச்சர் ஆவடி ச.மு. நாசர் அறிவுறுத்தலின்படியும், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் மற்றும் கும்புடிப்பூண்டி சட்ட மன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் ஆகியோர் ஆலோசனையின்படி நேற்று (07.03.2025) முத்தமிழ் அறிஞரின் நிழலாக செயல்பட்டு கழகத்தை காத்த இனமான பேராசிரியரின் 5-ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் அவரது நினைவை போற்றுகின்ற வகையில் மீஞ்சூர் பேரூர் செயலாளர் திரு.க.சு.தமிழ்உதயன் தலைமையில் திருவுருவப்படத்திற்கு புகழஞ்சலி மற்றும் மாலை அணிவித்து மீஞ்சூர் பஜார் வீதியில் நேஷனல் கஃபே அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழ தலைவர் மி.வீ.கோதண்டம், கவுண்டர் பாளையம் வ.சீனிவாசன். மீஞ்சூர் பேரூர் அவைத்தலைவர் ஜி.ராஜேந்திரன், தலைமை கழக வழக்கறிஞர் ஏ.கே சுரேஷ், மின் கழக தொமுச மாநில தலைவர் கே.சசிகுமார், மீஞ்சூர் பேரூராட்சி துணை தலைவர் ப.அலெக்சாண்டர் , அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மீஞ்சூர் பேரூர் கழக நிர்வாகிகள் கிளை கழக நிர்வாகிகள் என் கோபால், மீ. இராமகிருஷ்ணன், ஜோசப் ஸ்ரீனிவாசன், திருப்பதி வெங்கடேசன், எஸ். கணேசன், இந்துஸ்தான். சீனிவாசன், வ.மோகன், சாமுவேல் , தன்ராஜ், சேகர், ஜெயலட்சுமி, தன்ராஜ், முப்புராஜ், எழிலரசன், ஐயப்பன், சந்திரமோகன், ராஜேஷ், தாஸ், மேலும், கழக உடன்பிறப்புகள் மீஞ்சூர் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் தொகுதியில் அமைந்துள்ள, ரெட்டேரி Eco Tourist Spot ஆக மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் அப்பணிகளை மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். ஆய்வின்போது 32ஆவது வட்டச் செயலாளர் புத்தகரம் எம்.சரவணன் 30 அ வட்டச்செயலாளர் டி. சுந்தரம், மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், மாமன்ற உறுப்பினர் புத்தகரம் E.ஏழுமலை, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் முல்லை ஆறுமுகம், கலை இலக்கிய பகுத்தறிவு மன்ற அமைப்பாளர் தமிழ் மணி, டாக்டர் என்.எம்.டி கோபால், சி.வில். எம். செல்வம், வேலு ரவிச்சந்திரன், பி.டி.சி. சுந்தர்ராஜ், உமா மகேஸ்வரி, எஸ்.என். கோதண்டன், கௌதம் பாலாஜி, டாக்டர் நிவேதிதா, கா.மோகன் பாபு, எம்.ரமேஷ் மற்றும் பலர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பீரகுப்பம் மதுரா கே.ஜி.கண்டிகை கிராமத்தில் நேற்று (07.03.2025) பிற்பகல் 03.30 மணியளவில் திருத்தணியில் இருந்து சோளிங்கர் நோக்கிச் சென்ற டிப்பர் லாரியும், ஆர்.கே.பேட்டையில் இருந்து திருத்தணி நோக்கிச் சென்ற அரசுப் பேருந்தும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது பேருந்தில் பயணம் செய்த திருவள்ளூர் மாவட்ட சேர்ந்த நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் 28 நபர்கள் திருத்தணி மற்றும் திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் இதனை தகவல் அறிந்த தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று நல விசாரித்து அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டு அறிந்து பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறினார் அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திருத்தணி எம்.பூபதி, கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, மற்றும் அரசு அதிகாரிகள் மருத்துவர்லள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### தமிழ்நாட்டிற்கு இருமொழிக் கொள்கையே போதும்!

# பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளிடம் கட்டாயப்படுத்தி கையெழுத்து வாங்குவதா?

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி!

திருவள்ளூர், மார்ச் 8:

திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் பொது நூலகத்துறை இணைந்து 4 ம் ஆண்டு புத்தக திருவிழாவினை ஏற்பாடு செய்துள்ளது. இந்த விழா நேற்று 7 ம் தேதி முதல் வரும் 17 வரை 10 நாட்கள் சி.வி. நாயுடு சாலையில் பொருட்காட்சி திடல் வளாகத்தில் நடக்கிறது. இதன் தொடக்க விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார், ஊரக வளர்ச்சி முகமை மாவட்ட திட்ட இயக்குனர் வை.ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்றனர். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கலந்து கொண்டு புத்தகத் திருவிழாவை தொடங்கி வைத்து விழா பேருரை ஆற்றினர்.

இந்த புத்தகத் திருவிழாவில் தினமும் காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை கண்காட்சி நடைபெற உள்ளது. இக்கண்காட்சியில் 100 அரங்குகளில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தலைப்புகளில் லட்சக்கணக்கான புத்தகங்கள் விற்பனைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த புத்தகக் கண்காட்சியில் மாணவ, மாணவிகள் மற்றும் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைத்து வயதினருக்கும் பயன்படத்தக்க வகையில் புத்தகங்கள் ஒரே கூரையின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் தினமும் சிந்தனையை தூண்டும் வகையில் பேச்சாளர்கள் மற்றும் தமிழறிஞர்கள் பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளனர். புத்தக வாசிப்பின் பயன்கள் குறித்து பள்ளி மாணவ,மாணவியரின் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த புத்தகத் திருவிழா தொடங்கப்பட்டதையடுத்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வாசிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவள்ளூரில் 4 வது புத்தகத் திருவிழாவை திறந்து வைத்த பின் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது,

பள்ளிவாசலில் நின்று கொண்டு போர்டை வைத்துக்கொண்டு பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவிகளிடம் கையெழுத்து பெறுவது கண்டிக்கத்தக்கது. பள்ளிக்கு போகிற பிள்ளைகளை கையெழுத்து போட சொல்லி கட்டாயப்படுத்துவது பள்ளிக்குச் செல்லும் மாணவர்களை பயமுறுத்துவதாகவே கருதப்படுகிறது. எனவே துறையின் அமைச்சராக கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் அதிமுக எம் எல்ஏ மும்மொழி கொள்கையை ஆதரித்து கையெழுத்திட்டது வரும் தேர்தலில் அவர்களின் கூட்டணி பிரதிபலிப்பை காட்டுகிறது. அறிவு சார்ந்து அறிவியல் பற்றி பேச வேண்டிய காலத்தில் மத்திய அரசு கொடுக்கும் 2 ஆயிரம் கோடியை பெற்றுக் கொண்டு மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொண்டால் தமிழ்நாட்டு மக்களை 2 ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கி கொண்டு செல்வதாக முதல்வர் கூறி இருக்கிறார். இதன் அடிப்படையில் மும்மொழி கொள்கை தேவை இல்லை. இருவழிக் கொள்கையே போதும் என்ற நிலைப்பாட்டில் தமிழக அரசு உள்ளது.

பள்ளிவாசலில் நின்று கொண்டு போர்டை வைத்துக்கொண்டு பள்ளிக்குச் செல்லும் மாணவ மாணவிகளை கையெழுத்து பெறுவது கண்டிக்கத்தக்கது

பள்ளிக்கு போகிற பிள்ளைகளை கையெழுத்து போட சொல்லி கட்டாயப்படுத்துவது பள்ளிக்குச் செல்லும் மாணவர்களை பயமுறுத்துவதாகவே கருதப்படுகிறது. எனவே துறையின் அமைச்சராக கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மும்மொழி கொள்கைக்கு ஆதரவாக கையெழுத்து பெறுகிறோம் என்ற அடிப்படையில் பள்ளி வாசல்களில் நின்று பள்ளிக்குச் செல்லும் மாணவர்களை வலுக்கட்டாயமாக அழைத்து கையெழுத்து வாங்கும் பாஜக நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர்கள் தொலைபேசி மூலமாகவும் வாட்ஸ் அப் மூலமாகவும் கண்டித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தைச் சார்ந்தவர்கள் பாஜக நிர்வாகிகள் மீது புகார் அளிக்க



உள்ள நிலையில் பாஜக நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்

மாவட்ட போலீஸ் எஸ்.பி ரா.சீனிவாச பெருமாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் திருவள்ளூர் வி.ஜி.ராஜேந்திரன், பூந்தமல்லி ஆ.கிருஷ்ணசாமி, மாதவரம் எஸ்.சுதர்சனம், கும்மிடிப்பூண்டி டி.ஜெ.கோவிந்தராஜன், பொன்னேரி துரை சந்திரசேகர் , திருவள்ளூர் நகர் மன்ற தலைவர் உதயமலர், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்க செயலாளர்.முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வெங்கட்ராமன், உதவி ஆணையர் கலால் கணேசன், தனித் துணை ஆட்சியர் (சபாதி) பாலமுருகன், நகர மன்ற துணை தலைவர் சு.. சி.ரவிச்சந்திரன், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### வே.டில்லிபாபு தலைமை: அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனை!

# ஆலந்தூர் வடக்கு தி.மு.க. பகுதி செயற்குழு கூட்டம்!

## பகுதி கழகச் செயலாளர் ப.குணாளன் அறிக்கை!

சென்னை,மார்ச்.8-

ஆலந்தூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஆலந்தூர். ப.குணாளன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க.செயற்குழு கூட்டம் இன்று (8.03.2025 சனிக்கிழமை) மாலை 5:00 மணியளவில், ஆலந்தூர் கற்பக விநாயகர் கோவில் மண்டபத்தில் பகுதி அவைத் தலைவர் வே.டில்லிபாபு தலைமையில், பகுதி நிர்வாகிகளான கோ.கோட்டீஸ்வரன், ஐ.அழகேசன், ஜெயாசெல்வம், எம்.சையத் அபுதாகீர் ஆகியோர் வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் கலந்துக் கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே ஆலந்தூர் வடக்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதிவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள்,பாக முகவர்கள் (BLA-2), கழகத் தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

பொருள்: 1).கழகத் தலைவர்,தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் நமது மாவட்டத்திற்கு வருகை புரிவது தொடர்பாக. 2). கழக ஆக்க பணிகள்

இவ்வாறு ஆலந்தூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஆலந்தூர். ப.குணாளன் தெரிவித்துள்ளார்.



சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் வடக்கு பகுதி 102 அ வட்டத்தில் மாவட்ட கழகம் ஆலோசனையின் பேரில் நமது சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன் ஏற்பாட்டில் பொங்கல் பரிசு பகுதி கழக செயலாளர் சா. பரமசிவம், மாமன்ற உருப்பினர் ராணிரவிசந்திரன், முன்னிலையில் 102 அ வட்ட கழக செயலாளர் எம்ஜி ரவிக்குமார் தலைமையில் வழங்கபட்டது. இதில் வட்ட கழக நிர்வாகிகள் பகுதி மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.